
# சிறுவர் உரிமையும்,

## மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்களின் பிரச்சினைகளும்



வேலுப்பிள்ளை குணரத்தினம்

சீடா மீள்கட்டுமானத்திட்டம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை 2009

# சிறுவர் உரிமையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்களின் பிரச்சினைகளும்

**வேலுப்பிள்ளை குணரத்தினம்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமூக விஞ்ஞானத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

**வெளியீடு:**

**சீடா (CIDA) மீள் கட்டுமானத் திட்டம்**
**கிழக்குப்பல்கலைக்கழகம்**
**இலங்கை.**
**2009.**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | சிறுவர் உரிமையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்களின் பிரச்சினைகளும் |
| மொழி | : | தமிழ் |
| ஆசிரியர் | : | வேலுப்பிள்ளை குணரத்தினம் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு © |
| முதற் பதிப்பு | : | 2009 |
| பக்கங்கள் | : | vi+54=60 |
| அச்சிட்டோர் | : | மைக்கல்'ஸ் மொபைல் அச்சகம் |
| வெளியிட்டோர் | : | சீடா மீளுருவாக்கல் செயற்றிட்டம் கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை. |
| ISBN | : | **978-955-50754-2-8** |

| | | |
|---|---|---|
| Title | : | Child Rights and Problems of child in Batticaloa District |
| Language | : | Tamil |
| Author | : | Veluppillai Gunaretnam |
| Copy right | : | Author © |
| First Edition | : | 2009 |
| Pages | : | vi+54=60 |
| Printers | : | Michael's Mobile Printers |
| Publisher | : | Office of CIDA Restore Project Eastern University, Sri Lanka |
| ISBN | : | **978-955-50754-2-8** |

Print

Michael's Mobile Printers
90, Bar Road, Batticaloa.
Tel - 060 2642012, 065 4900485

# அணிந்துரை

ஒரு நாட்டின் கண்கள் என்று போற்றப்படும் முக்கிய செல்வம் சிறுவர்களாகும். இதனால் ஒரு நாட்டின் எதிர்காலச் சிறப்பு அதன் குழந்தைகளது விருத்திக்காக செய்யும் முதலீட்டிலேயே தங்கியுள்ளது.

மனித சமூகத்தின் அடுத்த தலைமுறையினை தீர்மானிக்கும் முக்கியமானவர்கள் சிறுவர்களாகும். ஆனால் இச் சிறுவர்கள் உடல், உள, சமூக பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இது அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்ற வேறுபாடுகள் இன்றி சிறுவர் உரிமை மீறல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இச் சிறுவர் உரிமை மீறல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகளை விதந்துரைக்கும் சமவாயத்தை மீறும் செயலாகவும் அமைந்துள்ளது. இதற்கு இலங்கையும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டமும் விதிவிலக்கான ஒன்றல்ல என்பதனை நூலாசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம், யுத்தம், இடம் பெயர்வு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பல காரணங்களினால் சிறுவர்கள் தங்களுடைய உரிமைகளை முன்னரை விட இழந்தவர்களாக பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்கின்றவர்களாக காணப்படுகின்றனர். இதனை நூலாசிரியர் உணர்ந்ததன் வெளிப்பாடகவோ அல்லது காலத்தின் தேவை அறிந்தோ இந்நூலை எழுதியுள்ளார் எனக் கருதுகின்றேன். இந்நூலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்களின் உரிமைகளுக்கு தடையாக உள்ள பல்வேறுபட்ட பிரச்சினைகளினை ஆழமாக, மிக நுணுக்கமாக, புள்ளிவிபர ரீதியாக இந்நூலில் நூலாசிரியர் ஆராய்ந்துள்ளமை பாராட்டுதற்குரிய விடயமாகும். பிரச்சினைகளுக்கான பரிந்துரைகளினை முன்வைத்துள்ளதுடன் சிறிய விடயங்களிலும் கூட கவனம் செலுத்தியுள்ளதுடன் யாவரும் இலகுவாக விளங்கிகொள்ளக்கூடிய வகையில் எழுதியுள்ளமையை வாசகர்கள் விளங்கிக் கொள்வார்கள் என நம்புகின்றேன். ஆசிரியரின் பயனுள்ள இம் முயற்சி பாராட்டத்தக்கது. இது போன்று சமூகப்பயனுள்ள பல நூல்களை தொடர்ந்து வெளியிட வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**ஞா. தில்லைநாதன்** BA (Hons), Mphil
சமூக விஞ்ஞானத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்

## - முன்னுரை -

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் 1989ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி சிறுவர்களுக்கான உரிமைகளை விதந்துரைக்கும் சமவாயமானது உருவாக்கப்பட்டது. இச் சமவாயமானது 54 உறுப்புரைகளினையும் இரண்டு மேலதிக பின் இணைப்புக்களையும் கொண்டுள்ளது. இவற்றினை உயிர் வாழும் உரிமைகள், பாதுகாப்பு உரிமைகள், அபிவிருத்தி உரிமைகள், பங்கு பற்றுதல் உரிமைகள் என்று நான்கு வகைகளின் உள்ளே உள்ளடக்க முடியும். இவ்வாறான உரிமைகளை சிறுவர்கள் முழுமையாக அனுபவிக்கின்றார்களா என்பதுதான கேள்விக்குரிய விடயமாகும்.

இலங்கையைப் பொருத்தவரையில் சிறுவர் உரிமைகளுக்கு எதிரான சிறுவர் துஸ்பிரயோக நடவடிக்கைகள் பல்வேறு வடிவங்களில் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் மட்டக்களப்பு மாவட்டமும் ஒன்றாகும். மட்டக்களப்பில் யுத்தம், வறுமை, இடம் பெயர்வு, பெற்றோர் வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டுக்கு செல்லுதல், பெற்றோர் பாதுகாவலர்களின் கவலையீனமான நடத்தை போன்ற பிரதான காரணிகளினால் சிறுவர் துஸ்பிரயோகம் என்பது அதிகரித்து செல்கின்ற போக்கினை அவதானிக்கலாம். இங்கு சிறுவர்கள் சிறுவர் உரிமைகளை அனுபவிப்பதனை தடுக்கின்ற வகையில் எவ்வாறு நடத்தப்படுகின்றனர், எவ்வாறு தடுக்கப்படுகின்றனர் என்பன போன்ற விடயங்கள் ஆழமாக, தெளிவாக, சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் ஆராயப்பட்டுள்ளன. மேலும் சிறுவர் துஸ்பிரயோகம் பற்றிய புள்ளி விபரங்கள் தரப்பட்டுள்ளதுடன் சிறுவர் துஸ்பிரயோகத்தை தடுப்பதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப் பட்டுள்ளன. மேலும் இவ்வாய்வுக்கு தரவுகளைத் தந்துதவிய மட்/ சிறுவர் நன்னடத்தை திணைக்களம், சிறுவர் மேம்பாட்டு திணைக்களம் ஆகியவற்றின் உத்தியோகஸ்தர்களுக்கு நன்றிகள் உரித்தாகுக.

நூலாசிரியர்

## Office of CIDA Restore Project

### Eastern University, Sri Lanka.

Publication Number : 0015

Name of the Book : Child Rights and Problems of child in Batticaloa District

Name of the Author : Veluppillai Gunaretnam

Printed with Financial Assistance from the

Canadian International Development Agency (CIDA)

Under the CIDA Restore Project

# உள்ளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | III |
| முன்னுரை | IV |
| 1.0 சிறுவர் உரிமைகள் பற்றிய ஓர் அறிமுகம் | 1 |
| 1.1. சிறுவர் என்போர் யார்? | 2 |
| 1.2. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய கோட்பாட்டு விளக்கம் | 4 |
| 1.3. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் இனங்காணப்பட்டமை | 5 |
| 1.4. சிறுவர் துஷ்பிரயோக வகைப்பாடுகள் | 6 |
| 2.0 மட்டக்களப்பு பிராந்தியத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகள் | 14 |
| 2.1. சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் | 14 |
| 2.2. சிறுவர் ஊழியத்தில் ஈடுபடுத்தப்படும் சிறார்கள் | 18 |
| 2.3. வீட்டுத்துறையில் ஊழியத்தில் ஈடுபடும் சிறார்கள் | 23 |
| 2.4. தெருவோரச் சிறுவர்களின் அவலநிலை | 27 |
| 2.5. பால்யத் திருமணம் | 30 |
| 2.6. சிறுவர்கள் மீதான சுனாமியின் தாக்கம் | 31 |
| 2.7. சிறுவர் இல்லங்களின் நிலையும்தொழிற்பாடும் | 32 |
| 2.8. பிரதேச செயலக ரீதியாக சிறுவர்துஷ்பிரயோகம் | 34 |
| 3.0 சிறுவர் உரிமைகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் | 50 |
| 3.1. பரிந்துரைகள் | 53 |
| 3.2. முடிவுரை | 54 |
| உசாத்துணைகள் | 54 |

## 1.0 சிறுவர் உரிமைகள் பற்றி ஓர் அறிமுகம்

சிறுவர் சமூகம் அவர்களின் உரிமை நல்வாழ்வு சிறுவர்களின் அபிலாசைகளை முதன்மைப்படுத்தல் அவர்களுக்கு உகந்த சூழலைக் கட்டியெழுப்புதல் முதலியன தொடர்பான உலகளாவிய அக்கறை சென்ற நூற்றாண்டிலே ஆரம்பமாகிவிட்டது எனலாம். இச்சிறுவர்களின் விசேட தேவைகளையும் அவர்கள் எதிர்கொள்ளும் அவல நிலைகளையும் சர்வதேச சமூகத்தின் முன்பாக எடுத்துக் கூறி அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல தசாப்தகால முயற்சியின் அறுவடையாக 1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 02 ஆம் நாள் சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் நடைமுறைக்கு வந்தது.

ஏனைய சமூக விழிப்புணர்வு விடயங்களைப் போலவே சிறுவர் உரிமை பற்றிய எண்ணக்கருவும் உலக அரங்கில் படிப்படியாக வளர்ச்சியுற்றது. சிறுவர்களின் நிலைமை பற்றிய சர்வதேச அக்கறை முதன்முதலாக 1923 ஆம் ஆண்டில் கருத்துருவம் பெற்றது. அதன் விளைவாக பிள்ளைகளின் அல்லது சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக சிறுவர் பாதுகாப்புக்கான சர்வதேச சங்கம் என்ற அமைப்பு ஐந்து அம்சப் பிரகடனம் ஒன்றினை ஏற்றுக்கொண்டது. 1948 இல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்சபை மேற்படி பிரகடனத்தை மேலும் விரிவுபடுத்தியது. இத்தகைய உலக நாடுகள் மற்றும் சிறுவர் நல அமைப்புக்களின் அயராத முயற்சியின் பலனாக 1989 நவம்பர் 20 ஆம் திகதியன்று சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் ஐ. நா. பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதோடு அது அங்கீகரிக்கப்பட்டது.

இச்சமவாயத்தின் பிரகாரம் சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் மிக ஆழமான முறையில் வலியுறுத்தப்பட்டுள்ளன. உயிர் வாழ்வதற்கான உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை, பங்குபற்றல் சார்பான உரிமை, கருத்து வெளிப்பாடு, சிந்தனைச் சுதந்திரம்

தொடர்பான உரிமை ஆரோக்கியமாக வாழும் உரிமை, விளையாட்டு ஓய்வு என்பவற்றுக்கான உரிமை முதலியவற்றை இங்கு குறிப்பிடலாம்.

## 1.1 சிறுவர் என்போர் யார்?

மானுட சமூகக் கட்டமைப்பில் மிக ஆரம்ப அபிவிருத்திக் கட்டத்தில் இருப்பவர்களே சிறுவர்களாவர். வரைவிலக்கண ரீதியில் பதினெட்டு வயதுக்குட்பட்ட அனைத்துப் பிள்ளைகளுமே சிறுவர்களாவர். சில சமூகங்களில் சிறுவர்களின் அனைத்து உடல் உள வளர்ச்சி தொடர் பான விடயங்களிலும் முழுமையான அக்கறை செலுத்தப்படுகின்றது. பழங்குடி சமூகங்களில் கூட சிறுவர்களுக்கான சமூகமயமாதல் பயிற்சிகள் அனுபவம் கொண்ட முதியவர்களால் வழங்கப்படுகின்றன.

சமூக உளவியலாளர்கள் பலரும் சிறுவர்களின் உளக்கட்டமைப்பு ஆளுமைப் பண்புகளை எடுத்து விளக்கியுள்ளனர். சிக்மன் பிறைட், (Sigmand Frued) காள் யங் (Karl young) முதலிய உளவியல் அறிஞர்களின் கருத்துக்கள் முக்கியம் வாய்ந்தவையாகும்.

வேற்றுக் களிமண் போலவும் எதுவும் வரையப்படாத வெற்றுப் பலகை யாகவும் சிறுவர்களின் உளக்கட்டமைப்பு விவரிக்கப்படுகின்றது. அவர்களை நாம் விரும்பியவாறு வடிவமைத்து சமூக நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளலாம் எனவும் கூறப்படுகின்றது. சிறுவர்களிடத்தே சூழல் பற்றிய அவதானம் துடிப்பான செயலுந்தல் அனைத்து விடயங்க ளையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் என்பன நிறைந்து காணப்படு கின்றது. மேலும் சமூகக் கோலங்களையும் வளர்ந்தோரின் நடவடிக்கை களையும் உன்னிப்பாக அவதானிக்கின்றனர். நேர்மறையான செயற்பாடுகளையும் எதிர்மறைச் செயற்பாடுகளையும் அவதானித்து அவற்றை ஆழ்மனதில் பதித்துக் கொள்கின்றனர். எனவே சிறுவர்கள் என்போர் தண்ணீரை அகத்துறிஞ்சும் வெறுமையான பஞ்சுப் பொதி

போன்றோர். எதனை அவர்களுக்கு வழங்குகிறோமோ அதனையே எதிர்காலத்தில் பிரதிபலிப்பர். இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த விசேட ஆளுமைப்பண்புடையோர் என்பதனால் சிறுவர்களை கையாள் வதிலும் விசேட அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

இன்றைய சமூகக்கட்டமைப்பில் சிறுவர்களாக இருப்போர் நாளை வெவ்வேறு சமூகப் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் வகிக்கும் தன்மையை எவரும் மறந்து விடமுடியாது. சிறுவர்களின் உரிமைகளும் நலன்களும் உரியவாறு கௌரவப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படும் பொழுதே ஒட்டு மொத்த சமூகத்தினதும் ஆரோக்கியம், அபிவிருத்தி என்பனவும் முழுமையாக பாதுகாக்கப்படும்.

வளர்ந்தவர்கள், பெற்றோர், சமூகத்தலைவர்கள் யாவரும் சிறுவர்களின் விசேட தேவைகளைப் புரிந்து கொண்டு அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது அவசியம். எவ்வாறாயினும் நடைமுறையில் சிறுவர்களின் தேவைகளும் நலன்களும் புறக்கணிப்புக்கு உள்ளாவதை காணலாம். வளர்ந்தோரின் சுயநலன் பேராசை முதலியவற்றிற்குத் துணைபோகும் நடவடிக்கைகளின் சிறுவர்கள் ஈடுபடுத்தப் படுவதனால் சிறுவர்களுக்கே உரிய குணப்பண்புகள் இழக்கப்படுகின்றன.

இன்றைய சமூகத்தில் வன்முறை குற்றச்செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இவற்றை குறைக்க வேண்டு மெனில் முதலில் இன்றைய சிறார்களின் உரிமைகள் நலன்கள் மீது அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்பதாக சமூகவியல் அறிஞர்க ளும் வலியுறுத்துகின்றனர்.

எமது நாட்டிலும் யுத்தம், வறுமை, சுனாமி அனர்த்தம் காரணமாக எண்ணற்ற சிறார்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகி இருக்கின்றனர். அவர்களின் உரிமைகள் வாழ்க்கை நலன்கள் அலட்சியப்படுத்தத் தக்கனவல்ல. இன்றைய சிறார்கள் மீது மேற்கொள்ளப்படும் சிறந்த

கரிசனையும் கவனிப்பும் நாளைய சுபிட்சமான தேசிய அபிவிருத்திக் கான இன்றியமையாத முதலீடு என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## 1.2 சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய கோட்பாட்டு விளக்கம்.

ஏனைய சமூகப்பிரச்சினை தொடர்பான எண்ணக்கருக்களை போலவே சிறுவர் துஷ்பிரயோகம் (Child abuse) எனும் எண்ணக்கருவையும் வரையறுப்பது சிக்கலானதாகும். ஏனெனில் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோக வடிவங்கள் புதியதாகவும் அதிர்ச்சியூட்டும் படியாகவும் அமைவதேயாகும். எவ்வாறாயினும் இத்துறையில் புலமை வாய்ந்த பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா அவர்களின் வரைவிலக்கணம் குறிப்பிடத்தக்கதாய் அமைகிறது. "பாதுகாப்பு அளிப்பவர் ஒருவராலோ அல்லது வயது வந்தவராலோ குறித்தவொரு சிறுவன்/சிறுமி மீது மேற்கொள்ளப்படும் அலட்சியப் போக்கான நடவடிக்கைகள் அல்லது அச்சிறுவன்/சிறுமிக்கு உடல் உளம் சார்ந்த தீங்கு விளைவிக்கத்தக்க நடவடிக்கைகளே சிறுவர் துஷ்பிரயோகம்" ஆகும்.

பல நாடுகளிலும் மிக அண்மைக்காலம் வரை, சிறுவர் துஷ்பிரயோக மானது சமூகத்தின் கண்களில் புலனாகவும் இல்லை. சமூக மனிதர்களால் இனங்காணப்படவும் இல்லை. சிறுவர்கள் எவ்வாறு உடல், உள ரீதியில் அடித்து, நொறுக்கி துன்புறுத்தப்பட்டனர் என்பதனை சாள்ஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) என்பாருடைய நாவல் நன்கு விவரணம் செய்தது. ஆனால் நாவல் வெளிவந்த அன்றைய சமகாலத் தில் அத்தகைய துன்புறுத்தல்கள் துஷ்பிரயோகங்களாக கொள்ளப்பட வில்லை.

## 1.3 இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் இனங்காணப் பட்டமை:

ஒரு கட்டத்தில் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் இல்லை என்றே நம்பிக்கை நிலவியது. சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பிரித்தானியா வில் இடம் பெறுவது தெரியவந்த பின்பே இலங்கையிலும் அவ்வாறான துஷ்பிரயோகங்கள் காணப்படுகின்றன என்று யதார்த்தமாக உணரப்பட்டது.

இலங்கையின் சமூக பாரம்பரியங்களும், வழக்காறுகளும், இறுக்கமான பண்பாட்டு மரபுகளும், இங்கு சிறுவர் துஷ்பிரயோகம் பாரதூரமாக நிலவுகிறது என்பதனை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதில் தடையாக அமைந்தன. எவ்வாறாயினும் சிறுவர் மீதான உடல்சார் துஷ்பிரயோகம் ஆனது, 1965 வரையில் இனங்காணப்படவில்லை. சிறுவர் மீதான பாலியல் சார்ந்த துஸ்பிரயோகம் ஆனது மிகத் தாமதமாகவே இனங்காணப்பட்டது.

1980 களின் முடிவிலும் 90 களின் ஆரம்பத்திலும் குருதி ஒழுக்குப் பிரச்சினைகளுடன் பெண் பிள்ளைகள் (சிறுமியர்) வைத்திய பரிசோத னைக்கு வந்தனர். அப்போது அவர்கள் பராயம் எய்தியவர்களாகவோ அல்லது அட்டைகளால் தாக்கப்பட்டவர்களாகவோ கருதப்பட்டது. அக்காலத்தில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய அறிவு முன் அனுபவம் அதிகளவான வைத்திய அதிகாரிகளிடம் காணப்படவும் இல்லை.

உண்மையில் இந்த இடத்தில் சிறுவர் துஸ்பிரயோக நடவடிக்கையை ஒரு மிதக்கும் பனிப்பாறைக்கு ஒப்பிடலாம். அதாவது அதனுடைய நுனிப்பாகம் மட்டும் கண்ணுக்கு புலனாகும், அதிகளவான பகுதிகள் கட்புலனாகாமல் மறைக்கப்பட்டிருக்கும். அத்துடன் அச்சுறுத்தல், இரகசியத்தன்மை, குடும்ப கௌரவம் போன்ற காரணமாகவும் சம்ப வங்கள் வெளிவருவதில்லை.

## 1.4 சிறுவர் துஷ்பிரயோக வகைப்பாடுகள்:

இன்று தேசிய சர்வதேச மட்டங்களில், சிறுவர் மீதான துஷ்பிரயோ கங்கள் அவ்வக்கலாசார சமூக இனத்துவ பின்புலங்களுக்கு ஏற்பவும் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்பவும் வெவ்வேறு வடிவங்களையும் நிலைகளையும் எடுக்கின்றன. எனினும் உலகெங்கணும் நிகழ்ந்துவரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை ஓரளவான பொதுமைப்படுத்தலின் கீழ், பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. உடல் ரீதியான துஷ்பிரயோகம்
2. சத்துணவுசார் அசட்டை/புறக்கணிப்பு
3. பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்
4. மனவெழுச்சி சார் துஷ்பிரயோகம்
5. மருத்துவப் பராமரிப்புசார்ந்த அசட்டை
6. பலவந்தமான போதைப் பொருள் செலுத்துகை
7. வீட்டுத்துறை சார் ஊழியம்
8. கட்டாயமான இராணுவத்துறை ஆட்சேர்ப்பு

### 1.4.1 உடல் ரீதியான துன்புறுத்தல்

அடித்தல், தீயினால் தீங்கு விளைவித்தல் என்பவற்றுடன் மேற்கொள்ளப் படும் எல்லாவகையான சித்திரவதைகளும் உடல் சார்ந்த துஷ்பிர யோகத்துடன் தொடர்புபட்டதாகும். எரிகாயம், வெந்நீர், சூட்டுக்கோல் என்பவற்றால் விளைவிக்கப்படுவதனை அவதானிக்கலாம்.

தற்போது பிள்ளைகளுக்கு அடிப்பதற்கு ஓர் எல்லை இருக்கிறதா? எனும் விவாதமும் எழுகின்றது. சில சமயங்களில், மூளையில் குருதி வெளியேற்றம் ஏற்படுவதால் பிள்ளையின் வாழ்க்கையே ஆபத்தில் முடிவுறலாம். பெற்றோர் தமது பொறுமையினை இழந்து தமது உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாத போது அவர்களின் கோபாவேசத்

திற்கு பிள்ளை இரையாகிறது. அடிப்படையில் இது தளர்ச்சிகரமான நிலையாகும்.

சிறுவர்கள் மீதான உடல் ரீதியான துஷ்பிரயோகத்தை இலங்கைச் சமூகம் ஒரு மேற்கத்தேய எண்ணக்கருவாகவே நோக்குகிறது. அநுராதபுர காலத்தைய அரசர்களில் ஒருவரான திஸ்ஸ மன்னன் நாட்டில் உடல்சார் தண்டனைகளை தடை செய்திருந்ததாக வரலாறு கூறுகின்றது. சிறுவர்கள் பெரும்பாலும் அடிக்கடி தத்தமது வீடுகளி லேயே சமூக ரீதியான தண்டனைகளுக்கு உள்ளாகின்றனர். பெற்றோர், மூத்த சகோதர சகோதரிகள். பாட்டன், பாட்டிகள், சிறிய தந்தை, சிறிய தாயார், மற்றும் பாதுகாவலர்களாலும் அவர்கள் தண்டிக்கப் படுகின்றனர்.

ஒரு வீட்டில் தந்தையானவர் தொழில்வாய்ப்பு இன்றியும், மதுபாவனை, போதைப் பொருள் பழக்கமும் கொண்டிருப்பின் அவருக்கு தனது பிள்ளைகளை உடல் ரீதியில் தண்டிக்கும் உளப்பாங்கும் முனைப்பும் அதிகம் காணப்படும்.

தொழில் வாய்ப்பின் பொருட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம் பெயர்ந்த தாய்மாரின் பிள்ளைகள் ஒப்பீட்டளவில் அதிகமான துஷ்பிரயோகங் களுக்கு உள்ளாகின்றனர். சரீர ரீதியான துஸ்பிரயோகங்களில் பல எண்ணிக்கையான காயங்கள், முறிவுகள் என்பன ஊமைக்காயங்க ளாயும் இருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது. பிள்ளை மீண்டும், மீண்டும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளது என்பதற்கான அத்தாட்சி இதுவாகும்.

சிலவேளைகளில் பிள்ளைகளை வைத்திய சிகிச்சைக்கு பெற்றோர் கொண்டு வரும் போது அப்பிள்ளைக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பில் முன்னுக்குப் பின் முரணான விளக்கங்களை வழங்கும் போது துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளமையை இனங்காணலாம். எனவே

காயங்களின் மாதிரி பெற்றோரின் விளக்கங்கள் பிள்ளையின் வயது தொடர்பில் ஒரு சிறந்த அனுமானத்தை மேற்கொண்டு துஷ்பிரயோகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது மருத்துவ அதிகாரிகளின் பொறுப்பாகும். அவ்வாறே பெற்றோர் ஆசிரியர்கள் சிறுவர் பராமரிப்பாள ருக்கும் இது பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குதல் நலம் பயப்பதாகும்.

### 1.4.2 சத்துணர்வுசார் அசட்டை

உடல் ரீதியான துஷ்பிரயோகம் நிலவாத சந்தர்ப்பத்திலும் கூட போஷாக்கு சார்ந்த புறக்கணிப்பானது சிறுவர் துஷ்பிரயோகத்தின் ஒரு பொதுவான அம்சமாக கருதப்படுகிறது. தமது உணவை தாமே பூர்த்தி செய்ய இயலாத வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்ப அலகுகள் சம்பந்தப்பட்ட துஷ்பிரயோகமாக நாம் இதனைக் கருத முடியாது. முற்றாக இத்தகைய சத்துணவு சார் குற்றச் சாட்டு பிள்ளை களை தாராளமாக பராமரிக்கவும் போஷிக்கவும் வசதி வாய்ப்பு மிக்க பெற்றோர்கள் வேண்டுமென்றே ஒரு தண்டனை முறைமையாக பிள்ளைகளுக்கான போஷாக்கு உணவுகளை வழங்க மறுப்பதே இங்கு சத்துணவு சார் துஷ்பிரயோகமாக எடுத்துரைக்கப்படுகிறது. இதனால் சிறுவர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதுடன் அவர்களின் இயல்பான வளர்ச்சியும் தடைப்படலாம்.

### 1.4.3 மனவெழுச்சி சார் துஷ்பிரயோகம்

இவ்வகையான துஷ்பிரயோகமே மிக நீண்ட காலத்திலான உளவடுக் களை ஏற்படுத்தவல்லது. பல சந்தர்ப்பங்களில் உணர்வுபூர்வம் அற்ற நிலையில் பிள்ளைகளின் அபிலாசைகள் மறுக்கப்படுவதனால் அவர்களின் ஆழ்மனதில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. பிள்ளைகளின் உலகம் அழகிய வண்ணங்களாலும் உணர்வுகளாலும் ஆனது. – ஒரு சிறிய கடுஞ் சொல்லும் அவர்களின் மென்மையான மனதை

புண்படுத்த இடமுண்டு சிறுவர்கள் உலகை நோக்கும் பார்வை வித்தியாசமானது.

சிறுவயதில் ஏற்படுத்தப்படும் உள ரீதியான துஷ்பிரயோகங்கள் சிறுவர் களின் ஆளுமை விருத்தியை எதிர்மறையாக பாதிப்பதோடு நீண்ட காலத்தில் பிறழ்வான நடத்தையாகவும் வெளிப்படலாம்.

## 1.4.4 வைத்தியக் கவனிப்பு சார் அசட்டை

வளர்ந்தோரின் கவனிப்பை வேண்டி நிற்கும் ஒரு பாரதூரமான நோயினால் ஒரு பிள்ளை வருந்தும் போது தாய் / தந்தை தமது சமூக ஈடுபாட்டின் பெயரில் பிள்ளைக்கான மருத்துவப் பராமரிப்பை உதாசினம் செய்யும் நிகழ்வை இதற்கு எடுத்துக் காட்டலாம். சமூகப் பிரமுகர்களாக பெற்றோர்கள் திகழ்வது ஒன்றே பிள்ளை மீதான மருத்துவக் கவனிப்பையோ உளப்பாட்டுத் தேவைகளையோ புறக்கணிப் பதற்கான நியாயப்பாடாக அமையாது என்பதனைச் சிறுவர் உரிமைக ளுக்காக குரல் கொடுப்போர் வலியுறுத்துகின்றனர்.

## 1.4.5 வீட்டுத்துறை ஊழியத்தில் ஈடுபடுதல்

சிறுவர்கள் மீதான மற்றுமொரு துஷ்பிரயோகமாக அவர்களின் கல்வி கற்கும் உரிமை பறிக்கப்பட்டு செல்வந்த வீடுகளில் அவர்களை வீட்டுத்துறை ஊழியத்தில் ஈடுபடுத்தலைக் குறிப்பிடலாம். வறிய குடும் பங்களைச் சார்ந்தோர் அவ்வறுமையின் தீவிரம் எவ்வளவு பாரதூர மானது எனினும் பிள்ளைகளை தமது குடும்பத்தை விட்டு அப்புறப் படுத்தலாகாது. இச்சந்தர்ப்பத்தில் வீட்டு வேலையில் ஈடுபடுத்தப்படும் சிறாரை எடுத்துக் கொண்டால் அவர்கள் பெற்றோருடன் வாழும் உரிமை தெளிவாக மறுக்கப்படுவதனை அவதானிக்கலாம். ஆயினும் சமூகம் இது தொடர்பில் பல்வேறு நிலைப்பாடுகளை கற்பிக்க முற்படுகின்றது. அதாவது வறிய பிள்ளைகள் பெற்றோருடன் வசிப்பதை

விட ஊழியம் புரியும் வீடுகளில் ஓரளவு சௌகரியமாக உள்ளனர் என்பதாகும்.

ஆனால் உண்மையில் வீட்டு எஜமான்களால் பிள்ளைகள் மீது உடல் உளம் சார்ந்து பலவகையான துன்புறுத்தல் இழைக்கப்படுகின்றது. அத்துடன் மிதமிஞ்சிய வேலைப்பளு, சுதந்திர மறுப்பு அடிமை நிலை, நிர்ப்பந்தித்தல், சித்திரவதை புரிதல், அடைத்து வைத்தல், கொடூரமான சரீர தண்டனை வழங்குதல். பாலியல் துஷ்பிரயோகம் என்று பல்வேறு கொடுமைகளுக்கும் இச்சிறார்கள் இலக்காகின்றனர். அது மட்டுமன்றி வீட்டுத்துறை ஊழியத்தின் காரணமாக இச்சிறுவர்களின் கல்வி பங்கு பற்றல், பண்பாட்டு ஆளுமை விருத்தி என்பனவும் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகின்றன.

### 1.4.6 பாலியல் துஷ்பிரயோகம்

சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் ஆனது இன்று உலகில் மிகப்பரவலாகவும் மோசமான வகையிலும் இடம் பெறுகின்றது. உண்மையில் மிக நெருக்கமான குடும்ப அங்கத்தவர்களாலும் உறவினராலும் பாதுகாவலராலும் சிறார்கள் மோசமான சீர் கேட்டு வலையில் அகப்படுகின்றனர் என்பது ஜீரணிக்க முடியாத உண்மையாக உள்ளது.

சிறுவர்களுக்கு நம்பகமானவர்களால் குறிப்பாக பெற்றெடுத்த தந்தை, அன்பும் அனுசரணையும் மிக்க அண்ணா, சித்தப்பா, மாமா என்போரின் கொடூர முகங்கள் இன்று வெளிச்சத்திற்கு வரும் நிலையில் சமூக ஆர்வலர்கள் பாரிய அதிர்ச்சி அடைகின்றனர். எனவே இப்பிரச்சினையை ஒரு சாதாரண விடயமாக நாம் கருதி விட முடியாது. மிக அண்மைக் காலமாக சமூகப் பொறுப்பு மிக்க தலைவர்கள், கற்றுத்தேறியவர்கள், சமூக அந்தஸ்தும் சேவை நாட்டம் உடையவர்கள் கூட சிறாரின் வாழ்க்கையைச் சீர்குலைக்கும் செய்திகள் வெளியாகின்றன.

பாலியல் சார் நடவடிக்கையின் தார்ப்பரியமே புரியாத களங்கமற்ற குழந்தைகள் இத்தகைய தார்மீகத்திற்கு புறம்பான வளர்ந்தோரின் நடவடிக்கைகளால் மனவெழுச்சி பாதிக்கப்பட்டு குழப்பமும், குற்றவுணர்ச்சியும் அடைகின்றனர். அத்துடன் அவர்களின் இயல்பான மகிழ்ச்சி, கற்றல் திறன், விளையாட்டு ஆர்வம், படைப்பாக்கல், கற்பனை ஆற்றல் யாவும் தளம்பல் அடைகின்றன. சுய வெறுப்புணர் வுக்கும் மிதமிஞ்சிய அச்சத்திற்கும் உட்படுகின்றனர். பயம், விரக்தி, அவநம்பிக்கை, குழப்பம் முதலிய உணர்வுகளால் தாக்கப்பட்டு தமது சம நிலையை இழந்து விடுகின்றனர். இதனால் எதிர்கால தலைமைத்துவ பொறுப்பை ஏற்கும் தகைமை மிக்க சிறார்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடுகின்றது.

## 1.4.7 ஆயுத மோதலும் சிறுவர் அபிவிருத்தியில் ஏற்படும் தாக்கமும்

இன்று உலகம் எங்கணும் யுத்த நடவடிக்கைகள் அதிகரித்துச் செல்கின்றன. ஆயுத மோதல்களால் சிறுவர் மீது உடல் சார் காயம், இடப் பெயர்வு, பாடசாலைகள் மூடப்படுதல், பெற்றோரின் திடீர் மரணம் குடும்பக் கட்டமைப்பு சீர்குலைதல் ஆகியவற்றாலும் பாதிப்புக்குள் ளாகின்றனர். ஆயுதமோதலானது, சிறுவர் அபிவிருத்தியின் அனைத்து அம்சங்களையும் சீர் குலைக்கின்றது.

குடும்பங்கள், பெண்கள் மீதும் ஆயுத மோதல் எதிர்மறையான பாரதூர மான அழிபாடுகளை ஏற்படுத்த அவை மறுபுறத்தில் சிறுவர்களையே மேலும் மோசமான நிலைக்குத் தள்ளி விடுகின்றது.

யுத்த நடவடிக்கையின் நேரடி விளைவுகளால் ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் கொல்லப்படுகின்றனர். அதைவிட அதிகமான சிறுவர்கள் சத்துணவு இன்மையாலும் மோசமான பிணிக ளாலும் மரணத்தை தழுவிக் கொள்கின்றனர். 1981இற்கும் 1988இற்கும்

இடைப்பட்ட கால கட்டத்தில் சுமார் 4,54,000 சிறார்கள் மொசாம்பிக் நாட்டில் கொல்லப்படுவதற்கு ஆயுத மோதலே பிரதான காரணியாக அமைந்தது.

ஏலவே சிறுவர்களுக்கு பாதுகாப்பற்ற உரிமைகள் பற்றி விழிப்புணர்வு குறைந்த சிறுவர் வாழ்வியலை ஊறுபடுத்தும் வறிய நாடுகளில் யுத்த நிலைமை தீவிரமுறுவதால் சிறார்களின் நிலை விபரிக்க இயலாத சீர்கேட்டு வரம்பினை அடைவதாக ஐ.நா. அமைய அதிகாரிகளின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சேமநல சுகாதார ஒழுங்குகளில் மேற்கொள்ளப்படும் பாரிய தாக்குதல் கள் சிறுவர் நலன்கள் மீதே பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆயுத மோதல் உச்சக்கட்டங்களில் நிலவும் போது சோமாலியாவில் இடம் பெற்ற சிறுவர்களின் மரணத்திற்கு சின்னம்மை நோய் வழி வகுத்தது. தீவிர மோதல்கள் சிறுவர்களின் மருத்துவப் பராமரிப்பை தடுத்தமையால் இந்த அவலநிலை உருவானது.

இவ்வாறே பங்களாதேஷ், கென்யா, மலாவி, நேபாளம், சியராலியோன், ரூவாண்டா, பொஸ்ணியா, சூடான் முதலிய நாடுகளிலும் ஆயுத மோதல்களும் அவற்றின் பக்க விளைவுகளும் இலட்சக்கணக்கான சிறார்களின் உயிர்களை காவு கொள்வதாக அறிக்கைகள் கூறுகின்றன.

அகதிமுகாம்களில் நிலவும் இடநெருக்கடி உணவுப் பற்றாக்குறை சுகாதாரச் சீர்கேடு, மோசமான நோய்த் தொற்றுக்கள் என்பனவும் சிறுவர் அபிவிருத்தியை குன்றச் செய்வதோடு அவர்களின் உயிர் வாழும் உரிமையையும் மறுப்பதாக அமைகின்றன.

ஆயுத மோதலின் போது தாய்மார் வறுமைநிலை எய்தக்கூடும். சோர்வு தளர்ச்சி ஏற்படலாம். அப்போது தமது குழந்தைகளை பேணுவது தொய்வும் தடையும் ஏற்படும் நீண்டகால மோதல்களால் சமூகக்

கட்டமைப்புக்களும் ஏனைய வலைப்பின்னல்களும் விழுமியங்களும் செயலிழந்து போகலாம். போரின் கொடூரத்தால் மக்கள் உயிருக்கு அஞ்சி இடம்பெயரும் நிலையில் குடும்பக் கட்டமைப்பின் வழமையான நடைமுறைகள் பாதிப்புக்குள்ளாகலாம். அப்போது சிறுவர்களின் உணவூட்டல் செயற்பாடுகள் கடும் பாதிப்புக்குள்ளாகும், சிறுவர் போசாக்கு நலிவுறும், உடல் நலம் குன்றும், உயிராபத்தும் ஏற்படும் எனவே மோதல்களின் விளைவுகள் சிறுவர் சமூகத்தை நலிவுறச் செய்துவிடும் என்பது கண்கூடாகும்.

இங்கே பகுத்தாராயப்பட்ட வடிவங்களை விட சிறுவர்களை பலவந்த மாக பிச்சை எடுக்க வைத்தல், அங்கவீனப்படுத்தல், ஆபாசமாக சித்தரித்தல், கடத்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தல், சட்டபூர்வமற்ற வகையில் தத்தெடுத்தல், இணையத்தள பாலியல் செயற்பாடுகளுக்கு உபயோகித்தல் என்று மேலும் பல வடிவங்கள் சமூகத்தில் இடம் பெறுகின்றன.

எனவே கோட்பாட்டு விடயங்களுக்கும் அப்பால் நடைமுறைச்சாத்தி யமான செயற்பாடுகளை முன்னெடுக்கும் போதே இப்பிரச்சினையின் தீவிரத்தை ஓரளவாயினும் மட்டுப்படுத்தலாம்.

எனவே நாம் எல்லோரும் சமூக உறுப்பினர் என்ற வகையில் சிறுவர் உரிமைகளை கௌரவிக்கும் ஒரு வலுவான சமூகப்பாதுகாப்பு முறை மைக்கு வித்திட எம்மாலான பங்களிப்பை நல்குதல் உடனடிப்பணி யாகும்.

## 2.0 மட்டக்களப்பு பிராந்தியத்தில் சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்.

### 2.1 சிறுவர்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகம்.

இன்று சமூக மட்டத்தில் பரவலாக பேசப்படும் ஒரு பிரச்சினையாக சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் காணப்படுகிறது. சிறுவர்கள் தமது சொந்த வீடுகளிலோ உறவினர் வீடுகளிலோ அறியப்பட்ட ஒரு இனம் தெரியாத நபரால் பாலியல் ரீதியாக துஸ்பிரயோகத்திற்கு உள்ளாவதே சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் என்று வரையறுக்கப்படுகிறது.

உலகில் 50 இலட்சம் சிறுவர்கள் பாலியல் ரீதியாக துஸ்பிரயோகத் திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இலங்கையில் 30000 சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டதாக அறிக்கையில் கூறுகின்றது. இவர்களுள் அநேகமானோர் 12 – 15 வயதுக்கு இடைப் பட்ட யுவதிகளாவர். ஆய்வுக்கள பதிவேடுகளின் மதிப்பீட்டிற்கு இணங்க மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏனைய அறிக்கை களுடன் ஒப்பிடுகையில் 64.28 % பாலியல் துஸ்பிரயோகச் சம்பவங்கள் கணக்கிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிறுவர் நன்னடத்தை திணைக் களம் கூறுகின்றது.

1950, 60 களில் அறியப்படாத அல்லது பரவலாக பேசப்படாத இப்பிரச் சினையானது தற்போது அதிகரித்து வருவதை தொடர்பூடகங்கள் மூலம் அறியலாம். பாடசாலை பிரத்தியேக வகுப்புக்கள், வீடுகள் சிறுவர்களுக்கான புகலிடங்கள் என்று பல்வேறு இடங்களிலும் இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. சமவாயத்தின் உறுப்புரை 34 “பாலியல் சார்நத சகல வகையான சுரண்டல்களில் இருந்தும், துஷ்பிரயோகத்திலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாப்பது அரச தரப்பின் பொறுப்பாகும்“ எனக் குறிப்பிடுகின்றது..

இவ்வாறு சிறுவர் மீதான பாலியல் துஸ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்கின்றமைக்கு யுத்த சூழல், வறுமை, நவீன தொடர்பாடல் சாதனங்கள், குடும்பக்கட்டமைப்பின் வீழ்ச்சி பெண்களின் புலம்பெயர்ந்த தொழில் முயற்சி முதலியவற்றை சுட்டிக் காட்டலாம்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை 1980 களுக்குப் பின்னர் ஏராளமான பெண்கள் குறிப்பாக இல்லத்தரசிகள் வீட்டுப் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு புறப்பட்டுச் செல்கின்ற னர். இந்நிலையில் பிள்ளைகள் தந்தைமாருடன் அல்லது நெருங்கிய உறவினர்களுடன் தனித்து விடப்பட்டனர். இச்சூழலில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தன. எவ்வாறாயினும் சிறுவர்கள் தனித்திருக்கும் போதும், வீதியாற் செல்லும் போதும், பிரயாணம் செய்யும் போதும், ரீயூசன் வகுப்புகளில் கற்கும் போதும், சில சமயம் பாடசாலைகளில் விசேட வகுப்புகளில் கலந்து கொள்ளும் போதும், பெற்றோரை பிரிந்து உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் போதும் இத்தகைய பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர்.

இரண்டு தசாப்த காலமாக தொடரும் நாட்டின் யுத்த சூழலும் இப் பிராந்தியத்தில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோக நடவடிக்கைகள் அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளது. நிலையான குடும்பங்களில் ஏற்பட்ட புலப்பெயர்வினால் குடும்பங்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. அகதிமுகாம்கள் உருவாகின. குடும்பத் தலைவர்கள் கொல்லப்பட்டும் கைது செய்யப்பட்டும் காணாமற்போயும் பல குடும்பங் கள் பாதுகாப்பையும் இழந்தன. இதனால் குடும்பக் கட்டமைப்பு சீர் குலைந்தது. சிறுவர்கள் மீதான கண்காணிப்பும் அக்கறையும் நலிவ டையத் தொடங்கின. பொருளாதார நெருக்கடி காரணமாக சிறுவர்கள் குடும்பத்தை விட்டு பிரிய நேரிட்டது. இத்தகைய பின்னணியில் அவர்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகச் செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்களும் அதிகரித்தன.

யுத்தத்தின் மற்றுமொரு விளைவாக கைவிடப்பட்ட அல்லது பெற்றோரை இழந்த சிறுவர்களை பாதுகாத்து பராமரிக்கும் பொருட்டு இம்மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் சிறுவர் இல்லங்கள் விரைந்து உருவாக்கப்பட்டன. இவற்றுள் ஒருசில நன்னடத்தை திணைக்களத்தினால் பதிவு செய்யப்படாமல் இயங்கி வருகின்றன. சிறுமிகளை பராமரிக்கின்ற பல இல்லங்கள் ஆண்களின் முகாமைத்துவத்தின் கீழ் செயற்படும் நிலையில் இங்குள்ள சிறுமியர்கள் இலகுவாக பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகும் நிலை தோன்றுகின்றது. இது தொடர்பான தகவல்கள் பல்வேறு இடங்களிலும் இருந்து கிடைக்கப்பெற்றாலும் போதியளவு சான்றாதாரங்கள் இன்மையால் உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை தோன்றுகிறது.

ஆய்வுகளின் பிரகாரம் பெற்றோரின் நேரடிக் கண்காணிப்பில் இருந்து பிள்ளைகள் விடுபடும் போது பெற்றோர் தமது உறவினர்கள் பால் நம்பிக்கை வைத்து அவர்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும் போது சமூகத்தில் மதிப்புக்குரியதாக கருதப்படும் பெரியவர்களிடம் சிறுவர்களை ஒப்படைக்கும் சூழலிலும் சிறுவர்கள் பாலியல் ரீதியான இம்சைகளுக்கு உள்ளாகின்றனர்.

எனவே பெற்றோர் ஆசிரியர்கள் சமூக பொறுப்புணர்வு மிக்கவர்கள் சிறுவர் மீதான பாலியல் இம்சைகள் தொடர்பில் மிக அதிகளவான சிரத்தையை எடுப்பது அவசியமாகிறது. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப இவ்வாறு பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகும் சிறுவர்கள் எவ்வகையான பாதிப்புக்குள்ளாவர் அல்லது எத்தகைய பிரதிபலிப்புக்களை புலப்படுத்துவர் என்பது பற்றி அறிந்திருப்பதும் சிறுவர்களை பாதுகாக்க துணைபுரியும்.

1. துஸ்பிரயோகத்திற்கு உள்ளான பிள்ளைகள் அமைதியாக அல்லது சோர்வாக தமது வழமையான செயற்பாடுகளில்

நாட்டமின்றி இருத்தல் அதிகளவு வழமைக்கு மாறாக தனிமையை நாடுதல்.

2. தமது வயதிற்கு மேலான முதிர்ச்சி மிக்க பாலியல் அறிவை வெளிப்படுத்துதல்.

3. தன்னைத்தானே காயப்படுத்தும் நடவடிக்கையை மேற் கொள்ளல்.

4. தற்கொலை முயற்சி, வீட்டைவிட்டு ஓடிப் போதல், போதை வஸ்து பாவனையில் ஈடுபடுதல், பிறழ்வான நடத்தையை வெளிப்படுத்தல்.

5. பாலியல் இம்சையை வெளிப்படுத்தல், அல்லது மற்றவர் களைத் தூண்டும் வகையில் நடந்து கொள்ளுதல்.

6. தாழ்வு மனப்பான்மையை வெளிப்படுத்தல், தன்நம்பிக்கை இழந்தவராக தென்படல்

7. துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்கள் நெருங்கிய உறவினர்கள் என்பதால் குடும்பத்தின் சகல உறுப்பினர்கள் மீதும் வெறுப் பைக் காட்டுதல்.

8. இவற்றை விட குழப்பம், பயம், சுய வெறுப்பு, மன உளைச்சல், அருவருப்பு, மனச்சோர்வு முதலிய உணர்வுகளையும் பாதிக் கப்பட்ட சிறுவர்கள் வெளிப்படுத்தலாம்.

கீழைத்தேய சமூக விழுமியங்களின் குறிப்பிட்ட சில நம்பிக்கைகள் காரணமாக இத்தகைய துஸ்பிரயோகங்கள் முறைப்பாடுகள் செய்யப் படாமல் சட்டத்தின் முன் கொண்டுவரப்படாமல் மூடிமறைக்கப்

படுவதனையும் அவதானிக்கலாம். இத்தகைய மரபுகள் மேலும் சிறுவர்கள் பாதிக்கப்படவே வாய்ப்பளிக்கும். எனவே குடும்ப மட்டத்திலிருந்து இவ்விடயம் கலந்துரையாடப்பட்டு இது தொடர்பான பயனான அறிவுறுத்தல்களையும் சிறுவர்களுக்கு வழங்குவது அவசிய மாகிறது.

சிறுவர்களை இன்று பாலியல் ரீதியில் துஸ்பிரயோகம் புரியும் பலரும் தாம் சிறுவராய் இருக்கும் போது அத்தகைய கொடுமையான அனுபவங்களுக்கு உட்பட்டிருத்தலை எடுத்துக் காட்டுகின்றன. மட்டக் களப்பு சமூகத்தின் பாரம்பரிய விழுமியங்கள் பண்பாட்டு மரபுகள் சில சமயங்களில் இப்பிரச்சினையை பற்றி பேசுவதற்கு தடையாக அமையலாம். எனினும் சிறுவர்களின் எதிர்கால நலன் கருதியும் எமது சமூகக் கட்டமைப்பின் சுபிட்சம் நோக்கியும் நாம் இப்பிரச்சினை தொடர்பில் விவாதிக்கவும் சமூகத்தில் பரப்புரை செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முனைதல் காலத்தின் கட்டாயத் தேவையாகிறது.

எப்போதும் சிறுவர்களின் செயற்பாடு அவர்களுடன் பழகும் பெரியவர்களின் தொடர்பில் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். சிறுவர்களுக்குரிய பாதுகாப்பினை குடும்பங்களும் பாடசாலைகளும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## 2.2 சிறுவர் ஊழியத்தில் ஈடுபடுத்தப்படும் சிறார்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் ஊழியம் அதிகரித்துள்ளமைக்கு மிகப் பிரதான காரணியாக போர்ச் சூழல் சுட்டிக்காட்டப்படுகிறது. இலங்கையின் சிறுவர் ஊழியத்துறையின் ஒரு மத்திய நிலையமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுவது பற்றியும் மிகச் சொற்பமா னவர்களே கவனத்தில் கொள்கின்றனர். பத்திரிகை செய்திகளை படிப்பதோடு சிலர் இப்பிரச்சினையை மறந்து விடுகின்றனர்.

எழுந்தமான புள்ளிவிபர அடிப்படையில் சுமார் 10,000 சிறுவர்கள் ஊழியத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மதிப்பிடப்படுகிறது. பெருமளவில் நகர்ப்புறங்களில் வசிப்போர் அரச அலுவலகங்களிலும் தொழில் புரியும் நிலைமை காணப்படுவதால் சிறுவர்களை வேலைக்கமர்த்தும் தன்மை அதிகரித்துச் செல்கின்றது.

இவ்வாறு இப்பிரதேசத்தில் சிறுவர் ஊழியம் அதிகளவில் பயன்படுத்தப் படுவதற்கு பின்வரும் சமூக பொருளாதாரக் காரணிகளைச் சுட்டிக் காட்டலாம்.

- சிறுவர்கள் கையாழுவதற்கு இலகுவானவர்கள் - அவர்களை எளிதாக வசப்படுத்தலாம்.
- பொருளாதார ரீதியில் சிறுவர்களை வேலைக்கமர்த்துவது மிகுந்த இலாபமாக அமைதல்.
- குழந்தைத் தொழிலாளர்கள் தமக்கென தொழிற்சங்கம் அமைக்க முடியாது என்பதனால் தொழில் நெருக்கடி போராட் டம் என்பன தவிர்க்கப்படல்.
- அச்சுறுத்தல் மூலம் பாரிய பளுவான வேலைகளை குறைந்த கூலியில் நிறைவேற்றும் வாய்ப்பு காணப்படுதல்.
- தம் மீதான அடக்குமுறை, சுரண்டல், பாரபட்சம், துஸ்பிர யோகம் என்பவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் வலுவற்ற வர்களாக சிறுவர்கள் இருத்தல்.
- குழந்தை தொழிலாளர்களில் அநேகர் கல்வி அறிவு குறைந்த வர்களாக காணப்படுவதால் துஸ்பிரயோகத்திற்கும் சுரண்டலுக் கும் வாய்ப்பாக அமைகின்றன.
- இத்தகைய குழந்தை தொழிலாளரின் சமூகப் பின்னணி பெற்றோரின் அறிவின்மை அவர்கள் சட்டம் பற்றி அறியா திருத்தல்.

இவற்றோடு மட்டக்களப்பு பிராந்தியத்தில் சிறுவர் ஊழியத்திற்கு தூண்டு விசைகளாக அமையும் காரணிகளை பின்வருமாறு பகுத்துப் பார்க்க லாம்.

**1. போர்ச் சூழலும் அதனோடு இணைந்த ஏனைய தாக்கங்களும்.**

யுத்தமானது வரலாற்றுக் காலந்தொட்டு முழு மனித குலத்திற்கும் சாபக் கேடாக அமைவதாகும். யுத்தத்தின் ஒரு பிரதான விளைவாக இப்பிராந்தியத்தில் சிறுவர்கள் தமது கல்வியை கைவிட்டு ஊழியத் துறையில் இணைக்கப்படுகின்றனர்.

விறகு விற்பனை, தாவர மரக்கறி விற்பனை, வீட்டு வேலை, அரிசி ஆலைகளில் கூலி வேலை, மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம் பெயர்வு என்றவாறு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்கள் நேரடி பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இதனால் சிறுவர்களின் கல்வி, விளையாட்டு, ஓய்வு சார்ந்த வாழ்க்கை முடிவுக்கு வருகின்றது. பதிலாக சிறுவர்கள் விறகுக்கு காட்டுக்கும் கடற்கரைக்கும் அரிசி ஆலைக்கும் வேறு தொழில் மையங்களுக்கும் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

கோறளைப்பற்று கிராமங்களிலும் ஏறாவூர் பற்று, மண்முனைப்பற்று மற்றும் பட்டிருப்பு தொகுதிசார்ந்த கிராமங்களிலும் அதிகளவான சிறுவர்கள் ஊழிய உருவாக்கத்திற்கு மிக முதன்மையான காரணம் யுத்தமும் அது சார்ந்த பாதிப்புக்களுமே என்பதனை ஆய்வுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**2. வறுமை நிலை சுரண்டப்படுதல்**

யுத்த சூழல் காரணமாக அடிநிலை மக்களின் ஜீவாதாரம் மிக மோசமான வகையில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வேறு பல

சமூக நலிவுகளும் ஏற்படுகின்றன. சமூக அறிஞர்களின் கருத்துப்படி வறுமை ஒரு நாசகார நச்சுச்சக்கரமாக தொழிற்பட்டு பல்வேறு சமூக சீர்கேடுகளுக்கும் ஆணிவேராக அமைகிறது. யுத்தம் காரணமாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்களில் தலைவிரித்தாடும் வறுமையை சமூக பொருளாதார அந்தஸ்து மிக்கவர்களும் முதலாளித்துவ சக்தி படைத்த வர்களும் தமது நலன்களுக்கு சார்பாக பயன்படுத்தி கொள்கின்றனர். குடும்ப ரீதியாக தாண்டவமாடும் வறுமை நிலையானது பிள்ளைகளின் பாடசாலை இடைவிலகலிற்கும் பின்னர் அவர்கள் சிறுவர் ஊழியத்தில் இணைந்து கொள்வதற்கும் வழிவகுக்கிறது.

### 3. கல்வி அறிவின்மை

இப்பிராந்தியத்தில் சிறுவர் சார்ந்த ஊழியத்தினை அதிகரிக்கச் செய் கின்ற மற்றுமொரு காரணியாக கல்வி அறிவின்மை காணப்படுகின்றது. கிராமிய சமூகத்தின் கல்வி அறிவின்மை வீதம் அதிகமாக நிலவுவதால் பிள்ளைகளின் கல்வித்துறையின் எதிர்காலம் சமூக அபிவிருத்தி என்பன பற்றிய பெற்றோரின் அக்கறை திருப்தி தரும் வகையில் அமைவ தில்லை. அத்துடன் பிள்ளைகளுக்கு மறைமுகமாக கல்வி மறுக்கப் படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சமவாயத்தின் உறுப்புரை 28 "கல்வி பயிலும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு என்பதை அரச தரப்பினர் ஏற்றுக்கொள்ளவேண்டும்" எனக் குறிப்பிடுகின்றது.

சான்றாக 1999ம் ஆண்டு ஒரு இலட்சத்து பத்தாயிரத்து நூற்றி அறுபத்தைந்து மாணவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி பயின்ற போதிலும் 22718 சிறுவர்களும் 21500 சிறுமியர்களும் பாடசாலைக்கு செல்லாதவர்களாக காணப்பட்டனர். (சான்றாதாரம் சிறுவர் நன்னடத் தைத் திணைக்களம் மட்டக்களப்பு)

சிறுவர் சமவாயத்தின் 28வது உறுப்புரையானது, அனைத்துச் சிறார்களும் ஆரம்பக்கல்வியை இலவசமாயும் கட்டாயமாயும் கிடைக்கும் உரிமையுடையோர் என்று வலியுறுத்தப்பட்டாலும் பல்வேறு சமூக, பொருளாதார காரணிகளால் கற்றலுக்கான வாய்ப்பு சிறார்களுக்கு மறுக்கப்படுகின்றது. இதன் மறுவிளைவாக சிறுவர் ஊழிய முனைப்புக்கள் அதிகரித்து செல்கின்றன.

## 4. மரபு ரீதியான எதிர்பார்ப்புக்கள்

காலம் காலமாக சமூகத்தின் பிரமுகர் வகுப்பினரிடம் காணப்படும் மன உணர்வுகளே இங்கு மரபுரீதியான எதிர்பார்ப்புக்களாக குறிப்பிடப் படுகின்றன. சமூக பொருளாதார பண்பாட்டு துறைகளிலும் பிற்பட்ட வர்களாய் காணப்படுவோரின் பிள்ளைகள் வீடுகளிலும் தொழிற்சாலை களிலும் ஊழியத்தில் அமர்த்தப்படுவதில் தவறு ஏதும் இல்லை என்கின்ற அபிப்பிராயம் உயர் வர்க்கத்தினரிடையே நிலவுவதை அவதானிக்கலாம். இதன்காரணமாகவும் சமூக நீதிக்கு அப்பாற்பட்டு இப்பிரதேசத்தில் சிறுவர் ஊழியம் அதிகரித்துச் செல்கின்றது.

## 5. நவீனமாதலும் சமூக மாற்றமும்.

இன்றைய உலக மயமாதல் சூழலில் நவீனமயமாதலில் புதிய தாக்கங் கள் மட்டக்களப்பு சமூகத்தையும் விசேடமாக நகர்ப்புற மக்களின் வாழ்வியல் போக்குகள் நடத்தைக் கோலங்கள் என்பன மாற்றங்களை சந்தித்து வருகின்றன. இதனால் கணவன், மனைவி இருவரும் தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தனிக்குடும்ப முறைமை யின் அதிகரிப்பு நகரமயவாக்கம் என்பவற்றின் தாக்கம் என்றுமில்லா தவாறு அதிகரிக்க சிறுவர்களை வேலைக்கமர்த்தும் நடைமுறையும் சமூகத்தில் பரவலடைகின்றது.

## 2.3 வீட்டுத்துறையில் ஊழியத்தில் ஈடுபடும் சிறார்கள்.

வீட்டுப்பணியாளர்களாக வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற சிறுவர் சிறுமியரே மிக மோசமான வகையில் சுரண்டப்படுவோர் என்று ஐ.நா அமையத்தின் சிறுவர் உரிமை சாசனம் குறிப்பிடுகின்றது.

மேலே நாம் எடுத்து நோக்கிய சிறுவர் ஊழியத்தின் ஒரு பகுதியாகவே இது அமைகிறது எனினும் இதன் தாக்கம் மட்டக்களப்பில் இன்று தீவிரமாக உணரப்படுகின்றது.

மட்டக்களப்பில் மாநகர பிரதேச எல்லையினுள் மாத்திரம் சுமார் 1000 சிறார்கள் வீடுகளில் பணிபுரிவோராக உள்ளமையை ஊடகங்கள் தெரிவித்தன (ஆதாரம் Weekend Express – Feb 19-20,2000) இன்று இவ்வெண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருக்க வாய்ப்புண்டு. மட்டக்களப்பு நகரில் கணவன், மனைவி இருவரும் உத்தியோகம் மேற்கொள்வோராக இருப்பின் அவர்களின் வீடுகளில் வீட்டு வேலை களை செய்வதற்கு ஒரு சிறுவனை அல்லது சிறுமியை அமர்த்திக் கொள்வது அவசியமாகவும் அதே சமயம் ஒரு நாகரிகமாகவும் மாறி விட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

இவ்வாறு வீட்டுத்துறைசார் ஊழியத்தில் ஈடுபடும் சிறுவர்கள் உடலியல் ரீதியான வன்முறை / தண்டனை உளவியல் சார்ந்த பண்படுத்தல் சில சமயங்களில் பாலியல் சார் துஸ்பிரயோகம் என்பவற்றை எதிர்கொள்ள நேரிடுகின்றது. இவை பற்றிய சம்பவங்கள் அடிக்கடி ஊடகங்களிலும் வெளிவருகின்றன.

சுறுசுறுப்பாக வேலை செய்யாத சமயங்களில் கவனக்குறைவாக இருக்கும் சமயங்களில் சிறுவர்கள் உடல் சார் தண்டனைகளை எதிர்கொள்கின்றனர். அடித்தல், சூடுவைத்தல், வெந்நீர் ஊற்றுதல், வசைச் சொற்களை பிரயோகித்தல் என்பனவாக அத்தண்டனைகள்

அமைகின்றன. சில வீடுகளில் சிறுவர்கள் கூரிய ஆயுதங்களினால் தாக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்தமை பற்றி ஊடகங்கள் அறியத் தந்துள்ளன.

இவற்றோடு போதிய உணவு வழங்கப்படாமை, நீண்ட நேர வேலை, அவமதிப்பு, ஓய்வெடுக்க அனுமதியாமை, வயதுக்கு மீறிய பொறுப்புக் களை சுமத்துதல், ஆரோக்கியமற்ற இடங்களில் தங்க வைத்தல், இயல்பான விருப்பங்களைத் தடுத்தல், விளையாடும் உரிமை மறுத்தல் முதலிய இம்சைகளையும் இங்கு குறிப்பிடலாம்.

வீட்டுத்துறை பணியாளர்களாக சிறுவர்களையே பெருமளவில் அமர்த்திக் கொள்வதற்கு அதிகளவில் ஆர்வம் காட்டப்படுவதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

- குறைந்தளவு வேதனத்தில் நிறைவான வேலைவாங்க இயலுதல்.
- சில சந்தர்ப்பங்களில் வேதனமின்றியே உணவு, உடை (அவையும் பற்றாக்குறையாகவே) என்பன வழங்க முடிதல்.
- கல்வி அறிவு குறைந்த சட்ட நுட்பமறியாத கிராமிய சமூக பின்புலம் கொண்ட (சிறுவர்களின்) பெற்றோரை ஏமாற்றுவது எளிதாக இருத்தல்.
- ஒரு சிறு தொகை பணத்துடன் நிரந்தர அடிமையாக்கிக் கொள்ளும் வாய்ப்பு காணப்படுதல்.
- பராமரிப்புச் செலவு குறைவாக இருந்தாலும் அடக்கியாளும் வாய்ப்பு நிலவுதலும்.

வீட்டுத்துறைசார் பணிகளில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்கள் பல்வேறு தாக்கங்களுக்கும் உள்ளாகின்றனர். மந்தபோசனை, இதயநோய், முதலிய பல நோய்களுக்கும் அவர்கள் ஆளாகின்றனர். மறுபுறத்தில் விரக்தி மனப்பாங்கு, அறியாமை, உட்சாகமின்மை, அளவுக்கு மீறிய

அச்சம், தாழ்வு மனப்பாங்கு முதலிய உளவில் தாக்கங்களுக்கும் உள்ளாகின்றனர். இன்றைய நகர்ப்புற வீடுகள் நவீன தொழிநுட்பம் காரணமாக மின் பாவனை மற்றும் இயந்திர சாதன பாவனையால் கிராமிய சூழலிலிருந்து வரும் சிறுவர்கள் உடற்காயம் மின் தாக்கம் உயிராபத்தையும் எதிர்கொள்ள நேரிடுகிறது. இவை அனைத்தையும் விட கல்விகற்கும் அரிய வாய்ப்பு இவர்களுக்கு மறுக்கப்படுவதால் அவர்களின் எதிர்காலம் இருள்மயமாகிவிடுகிறது.

எவ்வாறாயினும் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்து வதில் பின்வரும் விதிகள் நடைமுறையில் உள்ளமையும் கவனிக் கப்பாலது.

1. பாடசாலை தினங்களில் பாடசாலை நேரத்தில் சிறுவர்களை வேலைக்கமர்த்த முடியாது.
2. மு.ப 6.00 மணி தொடக்கம் பி.ப 8.00 மணிக்கும் இடையில் வேலைக்கமர்த்த முடியாது.
3. பாடசாலை நாட்களில் 2 மணித்தியாலங்களுக்கு மேல் பணிக்கு அமர்த்த முடியாது.
4. பளுவான வேலைகளில் ஈடுபடுத்த முடியாது.
5. உடல் உள ரீதியில் அல்லது கல்விக்கு பங்கம் விளைவிக்கும் பணிகளில் ஈடுபடுத்தலாகாது.

இவ்வாறு சட்ட ரீதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பல காணப்பட்ட போதிலும் அத்தனை விதிகளும் மீறப்பட்டு சிறுவர்கள் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

சிறுவர்களை வேலைக்கமர்த்துவதை காலப்போக்கில் முற்றாக ஒழிக்க வேண்டுமாயின் பின்வரும் விடயங்களைக் கையாள்வது பயனுள்ள முயற்சியாக அமையும் எனலாம்.

- சிறுவர்களை வேலைக்கமர்த்துவது ஒரு சமூகக் குற்றம் என்ற பொதுக்கருத்தை உருவாக்கி அது தொடர்பாக பரவலான பிரச்சாரம் செய்தல்.

- சிறுவர்களை வேலைக்கமர்த்தும் தரகர்கள் சமூக விரோதிகள் என்ற பொதுக்கருத்து உருவாக்கப்பட்டு அவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படும் சூழலை உருவாக்குதல்.

- சிறுவர்களை வேலைக்கமர்த்துவதால் அவர்களின் கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, உரிமைகள் பாதிக்கப்படுவது மட்டுமன்றி அவர்களின் முழு எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது என்ற கருத்தை கட்டியெழுப்புதல்

- பொது இடங்கள் தோறும் விளையாட்டு மைதானங்கள் சிறுவர் பூங்காக்கள், வாசிகசாலைகள் உருவாக்கப்பட்டு இந்த வசதிகள் காரணமாக சிறுவர்கள் மத்தியில் எவ்வாறான உடல், உள வளர்ச்சி ஏற்படுகிறது என்பதை பெற்றோருக்கும் சமூகத்துக்கும் எடுத்துக்காட்டுதல்

- சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் விடயம் தொடர்பாக சிவில் சமூகத்தை பொறுப்புள்ளதாக ஆக்குதல்

அதேவேளை சிறுவர் பிரச்சினை தொடர்பான தகவல்களை பொலிஸ் நிலையத்தில் உள்ள சிறுவர் பிரிவு அவ்வவ் பகுதியிலுள்ள சிறுவர் நன்னடத்தை திணைக்களம் அல்லது இல: 330 தலவத்துகொட வீதி, மாதிவெல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர என்ற விலாசத்தில் அமைந்துள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பவற்றுக்கு தொலைபேசி மூலம் (தொலைபேசி இலக்கங்கள் 011 2778911, 011 2778912, 0112778913) அல்லது எழுத்து வடிவில் முறைப்பாடு செய்வதன் மூலம் சிவில்

சமூகம் இந்த விடயத்தில் பங்களிப்புச் செய்யலாம் அப்பொழுது சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலாளித்துவ வீழ்ச்சியுடன் சிறுவர் ஊழியமும் ஒழிக்கப்பட்டுவிடும் என்ற பொதுவுடைமைவாதியான கார்ல் மாக்ஸ் (Karl Marx) தெரிவித் தார். ஆயினும் இன்றைய உலகமயமாதல் சூழல், நுகர்வுக் கலாசாரம் என்பன காரணமாக சமூக நீதி மறுக்கப்படுகின்றது. எனவே எமது நாட்டிலும் வலுவான சட்ட ஏற்பாடுகளை கடைப்பிடிப்பதோடு எமது வாழ்க்கை முறையை மீள் பரிசீலித்து தார்மீக விழுமி யங்களை அனுசரிக்கும் போதுதான் சிறுவர் ஊழியம் தொடர்பான சமூக பிரச்சினையின் தீவிரத்தை தணிப்பது சாத்தியமாகும்.

## 2.4 தெருவோரச் சிறுவர்களின் (Street Children) அவல நிலை.

உலகில் நகரங்களின் துரித வளர்ச்சி காரணமாக பல்வேறு சமூக பண்பாட்டு சிதைவுகள் ஏற்படலாயின. அவற்றின் ஓர் அங்கமாகவே தெருவோரச் சிறார்களின் அவலங்களையும் நோக்குதல் வேண்டும். தெருவோரச் சிறார்களை யுனிசெப் (UNICEF) அமைப்பு நான்கு பிரதான வகைகளில் பிரித்துள்ளது.

- உயிர் வாழ்வதும் உறைவிடமுமே உடனடித் தேவைகள் எனக்கருதி வீதியோரங்களில் வாழும் சிறார்கள்.
- தமது குடும்பத்தாரிடம் இருந்து பிரிந்து விடுதிகள் கைவிடப்பட்ட வீடுகள், கட்டடங்கள் போன்ற தற்காலிக இடங்களில் வசிக்கும் சிறுவர் சிறுமியர்.
- தமது குடும்பத்தாருடன் தொடர்பு கொண்டிருந்தாலும் வறுமை, இட நெருக்கடி, குடும்பத்தில் காணப்படும் பாலியல் சார்ந்த

அல்லது வேறுவகை உபத்திரங்களினால் இரவு வேளைகளில் தெருக்களில் திரியும் சிறுவர்கள்.

- நிறுவனங்களின் பராமரிப்பை விட்டு வெளியேறும் பல்வேறு காரணங்களின் பொருட்டு வீட்டை துறக்கும் சிறார்கள்.

மட்டக்களப்பிலும் வீதியோரச் சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதனை சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவர்களையும் பின்வரும் வகைப்பாடுகளில் பிரித்து நோக்கலாம்.

- **பஸ்தரிப்பு நிலையங்களில் பிச்சை (ஜாசம்) எடுத்தல்**

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல பஸ்தரிப்பு நிலையங்களிலும் 5 – 15 வயதுக்கு இடைப்பட்ட சிறார்கள் பயணிகளிடமும் தெருக்களில் செல்வோரிடமும் கையேந்தி பிச்சை கேட்பதனை சாதாரணமாக காணலாம். எவ்வாறாயினும் இக்காரியம் சிறுவர்களுக்கு எளிதான வேலையாக அமைந்துவிடுவதில்லை. இவர்கள் அன்றாடம் இத்தொழிலில் ஈடுபட்டு வருவதனால் பெரும்பாலான பயணிகளுக்கு பரீட்சயமானவர்களாகவே இருப்பர். இதனால் பயணிகளின் அனுதாபத்தை தேடும் பொருட்டு அச்சிறார்கள் பல்வேறு சாகசங்கள் நடிப்புக்களில் ஈடுபடுவர். பாட்டுப்பாடுதல், கையடித்தல், முரட்டுத்தன்மையை வெளிப்படுத்தல், காலை இழுத்து நடத்தல் என்றவாறு அமையும். எனினும் பல சந்தர்ப்பங்களில் பயணிகளின் அலட்சியம் வசை மொழிகளையும் இவர்கள் சந்திக்க நேரிடும்.

- **பாதணி, குடைகளை திருத்துதல்.**

மட்டக்களப்பு பிரதேசம் இரு தசாப்தங்களுக்கு மேலாக போர்ச்சூழலால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பெரும்பாலானோர் வறுமைக்கோட்டின் விழிம்புக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே பெற்றோர்களே தம்முடன் கூடியோ அல்லது தனித்தோ சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தும்

நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய பிரதிபலிப்பாகவே பாதையோரங்களின் பாதணி, குடை திருத்தும் பணியில் சிறுவர்கள் தமது தந்தை அல்லது சகோதரருடன் ஈடுபடும் காட்சிகளை இங்கே சுட்டிக்காட்டலாம்.

- **கந்தல் பொறுக்கிகள் கூலிகளாக தெருவில் வாழும் சிறுவர்கள்**

இப்பிரதேசத்தில் பல சிறுவர்கள் கந்தல் பொறுக்கிகளாக வேறுசிலர் கூலிகளாகவும் செயற்பட்டு வருகின்றனர். இவர்களுள் கந்தல் பொறுக்கி கள் தாம் சேகரிக்கும் பண்டங்களை விற்று ஒரு சிறு வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றனர். வேறுசிலர் அங்காடி வியாபாரிகளின் கூலிகளாக தொழில் புரிகின்றனர். வீடுகளுக்கு சந்தையில் இருந்து பண்டங்களை காவிச் செல்வது விறகு, தேங்காய் போன்றவற்றை உணவகங்களுக்கு காவிச் செல்லுதல், அலுவலகங்களுக்கு உணவுப் பொதிகளை கொண்டு செல்லுதல் முதலிய கூலித் தொழில்களிலும் பல சிறுவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

குடும்பங்களில் இருந்து வெளியேறி சிறுவர்கள், மற்றும் அகதி முகாம் வாழ்வினால் வெறுப்பும் விரக்தியும் அடைந்த கிராமிய சிறார்களே தெருவோரங்களை தமது இருப்பிடமாக்கி பல்வேறு இன்னல்களுக்கும் ஆளாகி இளமைப்பருவத்தையும் இழந்து விடுகின்றனர்.

வீதியோரங்களையே கதியாகக் கொண்ட இந்த அபலச் சிறார்கள் உடல் உள ரீதியான துஸ்பிரயோகங்களுக்கும் ஈவிரக்கமற்ற அசட்டை களுக்கும் ஆளாகின்றனர். இவர்கள் வளரிளம் பருவத்தை அடையும் போது சமூக விரோதிகளாகவும் நெறி புரண்டோராகவும் எதிர் காலத்தையே தொலைத்து விட்டவர்களாகவும் உருவாக வாய்ப்புண்டு.

இவர்களின் நடைமுறை வாழ்வானது சமூக நியமங்களுக்கு அப்பாற் பட்டு அமைவதால் சமூக அமைதிக்கு பங்கம் ஏற்படுவதோடு வளர்ந் தோரின் மனச்சாட்சியும் இங்கு கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. எனவே வீதியோரத்தில் வாழும் சிறார்களை மீண்டும் அவர்களின் குடும்பங்களோடு இணைத்தல் அல்லது ஆரோக்கியமான புகழிடங்க ளில் சேர்த்தல் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல் தொழில் பயிற்சி வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் ஓரளவுக் கேனும் தெருவோரச் சிறார்களின் வாழ்க்கையினை ஒழுங்கமைக்கலாம்.

## 2.5 பால்ய (இளவயதுத்) திருமணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்று இளவயது திருமணமாகும். இங்கு இள வயது திருமணம் என்பது 18 வயதுக்கு உற்பட்டவர்களையே குறிக்கின்றது. யுத்தம், இயற்கை அனர்த்தம், ஆகியவற்றால் நிகழும் இடப்பெயர்வுகள் பாடசாலைக்கல்வியை இடைநடுவில் விட்டு விலகுதல் இளவயதில் காதல் கொள்ளுதல், சமூக சட்டம், குடும்பக்கட்டமைப்பு சீர்குலைதல், குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் வறுமை, பெற்றோர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்லுதல், நவீன தொடர்பு சாதனங்களின் அதீத வளர்ச்சி என்பன இளவயது திருமணத்தை தூண்டுகின்ற பிரதான காரணிகளாகும். இதனால் சிறுவர்களும் சமூகமும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியேற்படுகின்றது. உடல் உள ரீதியான பாதிப்புக்கள் பொருளாதார ரீதியான பாதிப்புக்கள், சமூக ரீதியான பாதிப்புக்கள், என்பன ஏற்படுகின்றன. ஆகவே பெற்றோர், பாதுகாவலர், நலன்புரி அமைப்புக்கள், மதப்பெரியார்கள், அரசாங்கம், என்பன இப்பாதிப்பை கருத்தில் கொண்டு இளவயது திருமணத்தை தடுக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். சமவாயத்தின் உறுப்புரை 27 இல் ஒவ்வொரு பிள்ளையும் உடல், உள ஆன்மீக, ஒழுக்க, சமூக மேம்பாட்டிற்கு ஏற்றவாறு வாழ்க்கைத்தரத்தினை அனுபவிக்கும் உரிமை

உண்டு என்பதனை அரச தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்று குறிப்பிடப்பட்டுள்ளமை மனதில் கொள்ளத்தக்கது.

